[முற்பகல் 10-30]

டாக்டர் எச். வி. ஹாண்டே : ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர் சார். நான் ஏற்கனவே ஒரு உரிமைப் பிரச்சினை கொடுத்திருக்கிறேன் . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. திரு. சங்குமுத்து தேவர் 41-வது விதியின்கீழ் கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக் கொண்டு வருவார்கள்.

4. கவன ஈர்ப்பு

(அ) பாபநாசம் நூற்பு ஆலையில் தகுந்த ஊதியம் கோரி தொழிலாளர் உள் இருப்பு வேலை நிறுத்தம் செய்வது குறித்து

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் தாலுகா, மதுரை மில்ஸ் கம்பெனியைச் சேர்ந்த பாபநாசம் நூற்பு ஆலையில் கடந்த சுமார் 15 தினங்களாக (இன்று சுமார் 40 நாட்கள் ஆகின்றன) தொழிலாளர்கள் தங்களுக்குத் தகுந்த ஊதியம் கிடைக்கவில்லை என்று கோரி, உள் இருப்பு வேலை நிறுத்தம் செய்துவரும் நிலைமை பற்றிய அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் அம்பாசமுத்திரத்திலுள்ள மதுரை மில்லில் வேலை செய்யும் தொழிலாளர்களின் எண்ணிக்கை 5.664. வீவிங், பிளீச்சிங், டையிங் பிரிவு தொழிலாளர்களுக்குத் தற்போதைய தொழிலாளர் துறை ஆணையர், தனித் தொழிலாளர் துறை துணை ஆணையராக இருந்தபோது கொடுத்த தீர்ப்பின் கால அளவு 1—9—1971-ல் முடிந்துவிட்டது. ஆனாலும் அத்தீர்ப்பு தொடர்ந்து நடைமுறையில் இருந்து வந்தது. அதை மாற்றி அமைக்க நிர்வாகத்திற்கும் அனைத்து சங்கங்களுக்கும் பேச்சு வார்த்தை நடந்து வந்தது. சில பகுதிகளுக்கு வேலைப் பளுவை மாற்றி அமைக்கவும் மற்ற எல்லாப் பகுதிகளுக்கும் சம்பளம் கொடுக்கவும் நிர்வாகம் சங்கங்களுக்கு அறிவிப்புக் கொடுக்க 17—10—1973, 18—10—1973 தேதிகளில் பேச்சு வார்த்தைகள்

நடந்தன. 17—10—1973-ம் தேதி தொழிலாளர்களுக்கு ரூபாய் 300 இடைக்கால நிவாரணம் வேண்டும் என்றும் மற்றும் ஆலையிலுள்ள எல்லாத் தொழிலாளர்களுக்கும் ரூபாய் 100 முன்பணம் கொடுக்க வேண்டுமென்று சங்கங்களின் தரப்பில் கோரிக்கை வைத்தார்கள். அவைகளுக்கு விடை 20—10—1973-க்குள்ளாக கேட்கப்பட்டது. பண விஷயமாதலால் நிர்வாகம் மதுரையிலுள்ள தலைமை அலுவலகத்தை கேட்டுச் சொல்லுவதாகவும் பதில் கிடைத்தவுடன் தெரிவிப்பதாகவும் சங்கங்களுக்குத் தெரிவிக்கப் பட்டது. ஆனால் 21—10—1973-ம் தேதியன்று 3-ம் ஷிப்டில் அதாவது 22—10—1973 தேதி தொழிலாளர்கள் எவ்வித முன்னறிவிப்பின்றி சட்ட விரோதமாக வேலை நிறுத்தம் செய்து விட்டார்கள். எனவே, நிர்வாகத்தினர் 12—11—1973 முதல் கதவடைப்பு செய்தனர்.

திருநெல்வேலி தொழிலாளர் துறை அலுவலர், திராவிட பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், மதுரை ஜில்லா மில் தொழிலாளர் சங்கம், தேசிய பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், அகஸ்தியர் லேபர் சங்கம், பாபநாசம் லேபர் யூனியன் வீவிங் தொழிலாளர் சங்கம், விக்கிரமசிங்கபுரம் பஞ்சாலைத் தொழிலாளர் சங்கம், அம்பாசமுத்திரம் தாலுகா ஜெனரல் லேபர் யூனியன் ஆகியவற்றையும் உடனே மில் நிர்வாகத்தையும் 22—10—1973 தேதி சமரசப் பேச்சு வார்த்தைக்கு அழைத்து சமரச பேச்சு வார்த்தைகள் நடத்தினர். சமரசப் பேச்சு வார்த்தைகள் தொடர்ந்து 23—10—1973, 3—11—1973, 5—11—1973, 6—11—1973 ஆகிய நாட்களில் நடைபெற்றன. வேலை நிறுத்தத்தைக் கைவிட சங்கங்கள் சம்மதிக்கவில்லை. தொழிலாளர்களைத் திருப்தி செய்யும் அளவுக்கு ஏதும் செய்தால்தான் வேலை நிறுத்தத்தைக் கைவிடும்படி சொல்ல முடியும் என்று சங்கங்கள் முடிவாக அறிவித்துவிட்டன. சமரசப் பேச்சு வார்த்தைகள் வெற்றி பெறவில்லை. தொழிலாளர் துறை ஆணையர், மதுரை தொழிலாளர் துறை துணை ஆணையரை மேலும் சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தும்படி கேட்டுக் கொண்டுள்ளார். துணை ஆணையர் 17—11—1973 அன்று சமரசப் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். மேலும் தொடர்ந்து சமரச முயற்சிகளை மேற்கொண்டுள்ளார்.

திரு. ச. சங்குமுத்து தேவர்: தலைவர் அவர்களே. ஹார்வி மில்ஸ் நூற்பாலை சம்பந்தமாக மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்கள் சமரசப் பேச்சு நடைபெற்றதாகத்

தெரிவித்தார்கள். ஊதிய உயர்வு கேட்டு வீவிங் பிரிவில் வேலை பார்க்கக் கூடியவர்கள் மட்டும் வேலை நிறுத்தம் செய்ததற்கு மற்ற ஸ்பின்னிங் பிரிவில் வேலை செய்யக்கூடிய தொழிலாளர்களையும் 'லே ஆஃபில் வீட்டுக்குப் போங்கள், சம்பளம் கிடையாது' என்று மில் முதலாளி கூறியதன் காரணமாகத்தான் 6,000 தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடவேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. இதிலே டெபுடி கமிஷனர் மூலம் சமரசப் பேச்சு நடத்தி முடிவு காணுவது கஷ்டமானதாகத் தெரிய வருகிறது. டெபுடி லேபர் கமிஷனர் அவர்களுடன் திருச்சியில் சமீபத்தில் நடக்க இருக்கின்ற பேச்சு வார்த்தையின்போது அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டு சீக்கிரமாக மில் தொழிலாளர்கள் வேலைக்குச் செல்லக்கூடிய அளவில் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம் : ஸ்பெஷல் டெபுடி கமிஷனர் அவர்கள் சமரசப் பேச்சு நடத்துவதற்காக அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அதிலே வெற்றி பெறத் தாமதம் ஏற்படுமானால் விரைவில் இந்த வேலை நிறுத்தத்தை முடிக்க ஆணையர் அவர்களை அனுப்ப எண்ணி இருக்கிறேன் என்பதையும் தெரிவித்துக் கொள் கிறேன்.

(ஆ) அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியப் பகுதிகளில் உள்ள மருத்துவ விடுதிகளுக்கு மருந்து வழங்கப்படாதது குறித்து

திரு. ச. சங்குமுத்து தேவர் : தலைவர் அவர்களே, திருநெல் வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் ஊராட்சி ஒன்றியப் பகுதியில் உள்ள மருத்துவ விடுதிகளுக்கு 1972-73, 1973-74ம் வருடத்திற்கு எவ்வித மருந்தும் வழங்கப்படாததால், மருத்துவர்கள் கிராம மக்களுக்குத் தேவையான பணிகளைச் செயலாற்ற முடியாமல் இருந்து வருகின்ற நிலைபற்றிய அவசரப் பொதுமுக்கியமான காரியத்தை மாண்புமிகு நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் : தலைவர் அவர்களே, கிராமப் புற மக்களுக்கு மருத்துவ வசதிகளை அளிப்பதற்கு அந்தந்த ஊராட்சி ஒன்றியங்கள் ஒரு பகுதி பொறுப்பு வகிக்கின்றன. ஊராட்சி ஒன்றியங்கள் முறையான மருந்தகங்களை நடத்தி வருகின்றன. இந்த மருந்தகங்களை நடத்த ஊராட்சி ஒன்றியங்கள்